**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்**

**OS.No: 52/2022** **நாள் 14.11.2025.**

**வாசா.2, திரு.இருளப்பசாமி**

**வா.சா.2 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிர்வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

வாதியானவரை எனக்கு 10 வயதில் இருந்தே தெரியும். வாதி என்ன தொழில் செய்து வருகிறார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் ஆரம்பத்தில் அவர் மணல், செங்கல் வியாபாரம் செய்து வந்தார் தற்போது அவர் சிறு சிறு வீட்டு மனைகளை விற்பனை செய்து வருகிறார். வாதி யார் யாருக்கு எல்லாம் அடமான கடன்மற்றும் புரோ நோட்டு கடன் கொடுத்துள்ள விபரம் எனக்கு தெரியாது. எதிர்வாதியை எனக்கு எப்படி தெரியும் என்று கேட்டால் பொட்டல்பட்டி பஸ் நிலையத்தில் சலூன் கடை வைத்துள்ளேன். நல்லமங்கலம் கிராமத்தில் இறந்துபோனவர்களின் குடும்பத்திற்கு சிறிது காலம் ஈமகிரிகை வேலைகளை செய்து வந்தேன். பிரதிவாதியின் அப்பாவை எனக்கு தெரியும் என்று கேட்டால் பிரதிவாதியின் அப்பாவின் இறப்பிற்கு நானும், ராதாகிருஷ்ணன் என்ற கண்ணனும் சென்றோம். நான் நூலகத்தில் பேப்பர் படித்துக்கொண்டிருந்த போது தாவா புரோ நோட்டில் சாட்சி கையொப்பம் செய்ய வேண்டும் என்று சொல்லி கனகராஜ் சின்ன உதவி செய்யவேண்டும் என்று சொல்லி என்னை கூப்பிட்டார். என்னை கூப்பிட்ட போது காலை சுமார் 10 அல்லது 10.30 மணி இருக்கும் . மேற்படி நூலகம் வாதியின் வீட்டிற்கு எதிரே தான் உள்ளது. என் வீடு வடக்கு தெருவிலும், வாதியின் வீடு தெற்கு தெருவிலும் உள்ளது. தினமும் காலை 10 மணி முதல் 11 மணி வரை எனக்கு சாப்பாடு நேரம் அப்போது நான் என் கடையை அடைத்திருந்தேன். எதிர்வாதியை எனக்கு தெரியாது என்று சொன்னால் அது சரியல்ல. 15.08.2019 ம் தேதியில் நான் புரோ நோட்டில் கையொப்பம் செய்ததாக சொல்லும் போது கடைசியாக அந்த புரோ நோட்டை எப்போது பார்த்தேன் என்ற கேட்டால் 15.08.2019 ம் தேதியில் நான் கையெழுத்து போட்ட தினத்தன்று பார்த்தேன். தாவா புரோ நோட்டில் உள்ள கையெழுத்து எதிரி கனகராஜ் உடைய கையெழுத்து அல்ல என்று சொன்னால் அது சரியல்ல. எதிர்வாதியானவர் வாதியிடமிருந்து எந்தவிதமான தொகையும் வாங்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல . தாவா புரோ நோட்டில் எதிர்வாதி

**கையொப்பம் செய்யாமல் நானும் வாதியும் சேர்ந்து உற்பத்தி செய்து கொண்டோம் என்றால் அது சரியல்ல. நான் வாதிக்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 14th day of November 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.